# இந்திய தனியார் பல்கலைக்கழகங்களில் பாரத் உயர்கல்வி நிறுவனம் முதல் இடம்

சென்னை, மே.14

**தலைசிறந்த கல்வி நிறுவனங்கள் தரவரிசை பட்டியலில் பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இந்திய தனியார் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தில் இருப்பதாக சிமேகோ நிறுவனம் தெரிவித்துள்ளது.**

முன்னாள் மத்திய அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகனை நிறுவனராக கொண்டு செயல்படும் பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு தனியார் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் முதல் இடம் கிடைத்து இருக்கிறது. 2020ம் ஆண்டுக்கான கல்வி நிறுவனங்களின் தரவரிசை பட்டியலை சிமேகோ நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த தரவரிசை நிறுவனங்களின் கல்வி ஆராய்ச்சி வெளியீடு, புதுமையான கண்டுபிடிப்புகளின் வெளியீடுகள், பகுப்பாயும் தன்மை மற்றும் சமூக தாக்கம் போன்ற குறியீடுகளின் அடிப்படையில் வெளியிடப்படுகிறது. உலகெங்கிலும் இருந்து 4 ஆயிரத்து 126 உயர்கல்வி நிறுவனங்கள் இந்த தரவரிசை பட்டியலில் ஈடுபடுத்தப்பட்டன.

அந்தவகையில் பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது தனியார் இந்திய பல்கலைக்கழகங்களில் ஒட்டுமொத்தத்தில் முதல் இடத்தை பெற்று இருக்கிறது. இந்தியாவில் தலைசிறந்த 10 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இடம்பெற்ற ஒரே தனியார் பல்கலைக்கழகம் இது மட்டுமே.

அதேபோல், இந்தியாவில் ஆராய்ச்சியில் அனைத்து பல்கலைக்கழகங்களையும் பின்னுக்கு தள்ளி முதல் இடத்தை தக்க வைத்துள்ளது. அதிலும் ஆராய்ச்சியில் உலகின் தலைசிறந்த 300 இடங்களில் உள்ள ஒரே இந்திய நிறுவனமாகவும் இது உள்ளது.

இதுதவிர என்ஜினீயரிங், சுற்றுச்சூழல் அறிவியல், கணினி அறிவியல், இயற்பியல் மற்றும் வானியல் போன்ற தலைசிறந்த 4 பாடங்களுக்கான தரவரிசையில் தலைசிறந்த பல்கலைக்கழகமாகவும் திகழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாமல், வணிக மேலாண்மையில் 7வது இடம், மருத்துவத்தில் 12வது இடமும் கிடைத்து இருக்கிறது. இந்த இடத்தை எட்டிப்பிடிக்க காரணமாக இருந்த ஆசிரியர்களை எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

அதேபோல், பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஜே.சந்தீப் ஆனந்த், நிறுவனத்தின் ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நன்றியை தெரிவித்ததோடு, 'இந்தியாவில் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் நிறுவனம் முன்னிலை வகிப்பது என்பது பெருமைக்குரிய தருணம்' என்றும் கூறினார்.




சிமேகோ நிறுவனம் வெளியிட்ட தரவரிசை பட்டியலில் தலைசிறந்த தனியார் பல்கலைக்கழகங்களில் பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் முதல் இடத்தை பிடிக்க காரணமான ஆசிரியர்களை, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பாராட்டினார்.

## ரியல் எஸ்டேட் கூட்டமைப்பு தலைவர் ஆ.ஹென்றி ரம்ஜான் வாழ்த்து



சென்னை, மே. 14–

உலகம் முழுவதும் வசித்து வரும் இஸ்லாமிய பெருமக்கள், சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் அகில இந்திய ஜனநாயக மக்கள் நலப்பேரவையின் தலைவரும், அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசியத் தலைவருமான ஆ.ஹென்றி ரம்ஜான் பெருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

மனிதகுலத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் இறைத் தூதர் நபிகள் நாயகம் அருளிய போதனைகளை மனதில் நிறுத்தி, உடலையும், உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி, தூய்மை உணர்வோடு புனித ரம்ஜான் மாதத்தில் நோன்பு இருந்து, அத்துடன் ஈகையின் சிறப்பினை எல்லோருக்கும் உணர்த்தும் வகையில், தாம் ஈட்டிய செல்வத்தில் ஒரு பங்கை ஏழை எளியோருக்கு அளித்து, அனைவரும் இன்புற்று வாழ்ந்திட வேண்டி இறைவனை தொழுது, ஈகைத் திருநாளான ரமலான் பெருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் என் அன்பிற்குரிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எமது இனிய ரம்ஜான் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.ஹென்றி தமது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

## வில்வித்தையில் சென்னையைச் சேர்ந்த 5 வயது சிறுமி சஞ்சனா உலக சாதனை

### ஹிஸ்ட்ரி டிவியில் ஒளிபரப்பு

சென்னை, மே. 14–

குழந்தைகள் வாழ்க்கையின் முதல் படியைக் கற்கத் துவங்கும் இந்த இளம் வயதிலேயே சென்னையைச் சேர்ந்த 5 வயது சிறுமி பி.சஞ்சனா வில்வித்தையில் உலக சாதனை படைத்துள்ளார். திங்கட்கிழமை (17ந் தேதி) இரவு 8 மணிக்கு 'OMG! Yeh Mera India'–இன் அடுத்த அத்தியாயத்தில், 3 வயதில் கின்னஸ் உலகச் சாதனைகளில் இடம் பிடித்த அதிசய சிறுமியைச் சந்தியுங்கள்! ஹிஸ்ட்ரி டிவி18ல் ஐந்தாம் ஆண்டு மற்றும் ஏழாவது சீசனில் இருக்கும் இந்த வெற்றிகரமான சூப்பர் தொடர் சாதாரண இந்தியர்களிடையே உள்ள நம்ப முடியாத திறமைகளையும் அற்புதமான சாதனைகளையும் வெளிப்படுத்துவதன் மூலம் நாடு முழுவதும் பார்வையாளர்களை தொடர்ந்து வியப்பில் ஆழ்த்தி வருகிறது.

சிறுமி சஞ்சனா இந்த இளம் வயதிலும் திடமும் உறுதியும் கொண்டவர், மேலும் 1,111 அம்புகளை 3 மணி மற்றும் 27 நிமிடங்களில் எய்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார், மேலும் அவரது இரு அற்புதமான சாதனைகள் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸிலும் இடம் பெற்றுள்ளன.

16–ம் நூற்றாண்டில் துப்பாக்கிகள் உபயோகத்திற்கு வரும் வரை வில்வித்தை பெரும்பாலானோர் கற்கும் பிரதான போர்க் கலையாக இருந்தது. தற்போது ஒலிம்பிக் விளையாட்டாக உள்ள வில்வித்தை, இந்தியாவுக்குப் பல பாராட்டுகளைப் பெற்றுத் தந்ததோடு பலர் விரும்பிக் கற்றும் மற்றும் பல தொழில்முறை விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ள விளையாட்டாகத் திகழ்கிறது. ஆனால் வில்வித்தை பிரிவில் உள்ள பல பிரபலமான பெயர்களில் பி.சஞ்சனா மிகவும் வயது குறைந்தவர்.



தரையில் இருந்து 20 அடி உயரத்தில் தலைகீழாகத் தொங்கும் நிலையில் சஞ்சனா கண்களை மூடிக் கொண்டு இலக்கை நோக்கிச் சுடுமாறு கேட்கப்படுவார். இறுதியாக அவர் செய்த சாதனை 111 அம்புகளை 13 நிமிடங்கள் 14 வினாடிகளில் எய்ததாகும். இந்த எபிசோடில், அவரது தந்தை மற்றும் அவரது பயிற்சியாளரிடமிருந்து பார்வையாளர்கள் சிறுமி சஞ்சனா பற்றிய மேலும் நுணுக்கமான தகவல்களைக் கூறுவதைக் காணலாம்.

## பிரபல எழுத்தாளர்களின் தொடர் கதைகளை செல்போனில் படிக்க புதிய செயலி அறிமுகம்

சென்னை, மே. 14–

தமிழகத்தில் முதன்முறையாக தொடர்கதைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் செயலி BYNGE. கதை வாசிப்பது என்பது பேரானந்தம். அதுவும் பிரபல எழுத்தாளர்களின் கதைகளை இலவசமாக, உங்கள் மொபைலில் வாசிக்கலாம் என்பது எப்பேர்ப்பட்ட ஆனந்தம்..?

சாரு நிவேதிதா, ராஜேஷ் குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், இந்திரா சௌந்தர்ராஜன், பவா செல்லத்துரை, பா.ராகவன், காஞ்சனா ஜெயதிலகர் போன்ற இன்றைய பல பிரபலங்களின் கதைகள், கல்கி, நா.பார்த்தசாரதி, லா.ச.ராமாமிர்தம், சாவி, ராஜம் கிருஷ்ணன் கி.வா. ஜகந்நாதன், வல்லிக்கண்ணன், சு.சமுத்திரம் போன்றவர்களின் காலங்கள் தாண்டியும் பேசப்படும் சரித்திரம், சமூகம் மற்றும் காதல் கதைகளையும் தற்போது இலவசமாக நீங்கள் படிக்கலாம். இன்னும் பல பிரபல எழுத்தாளர்களும் இளம் எழுத்தாளர்களும், புதுமுகங்களும் BYNGE செயலியில் இணையப் போகிறார்கள்.

கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஆப் ஸ்டோரிலும் BYNGE செயலியை டவுன்லோடு செய்து, உங்கள் மனம் கவர்ந்த எழுத்தாளரின் விறுவிறுப்பான தொடர்களை வாசிப்பதோடு, அவர்களோடு விவாதிக்கவும் செய்யலாம்.



சென்னை துறைமுகம் தலைவர் சுனில் பாலிவால் மற்றும் துணைத் தலைவர் பாலாஜி அருண்குமார் ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். அப்போது துறைமுக செயல்பாடுகள் மற்றும் துறைமுகத்தில் கொரோனா பாதுகாப்பு செயல்பாடுகள் குறித்து முதல்வர் கேட்டறிந்தார்.

## கொரோனா சிகிச்சைக்கு கேப் ஜெமினி நிறுவனம் ரூ.50 கோடி நன்கொடை

சென்னை, மே.14–

**பிரபல சாப்ட்வேர் நிறுவனமான கேப் ஜெமினி, மத்திய மாநில அரசுகளின் கொரோனா சிகிச்சை நடவடிக்கைக்கு ரூ.50 கோடி நன்கொடை வழங்கி உள்ளது.**

இது அரசு மருத்துவமனைகள் அவசர சிகிச்சை வசதிகள், ஆக்சிஜன் உற்பத்தி ஆலை, நிவாரண பணிகளுக்கு செலவிடப்படும் என்று தலைமை நிர்வாக அதிகாரி அய்மான் எசாட் தெரிவித்தார்.

இந்தியாவில் 3 ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகள், கொரோனா பரிசோதனை வசதிகளுக்கு யூனிசெப் அமைப்புக்கு கேப் ஜெமினி கொரோனா சிகிச்சைக்கு ரூ.5 கோடி நன்கொடை வழங்கி உள்ளது. கேப் ஜெமினி ஊழியரின் குடும்பத்துக்கு தீவிர சிகிச்சை வசதிக்கு ஏற்பாடு செய்துள்ளோம் என்று இந்திய பிரிவு தலைமை நிர்வாகி அஸ்வின் யார்டி தெரிவித்தார். ஏற்கனவே கேப் ஜெமினி 15 அரசு மருத்துவமனைகளுக்கு 100 ஆக்சிஜன் செறிவூட்டிகள் சப்ளை செய்து உள்ளது என்றார் அவர்.

**ENROLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after. I, Moorthy V.S, S/o. S.Venkatraman, aged 51 years, permanently residing at No.1, Teachars Colony, 1st Main Road, Kodungaiyur, Chennai – 600118. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Moorthy V.S**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, B.Dwarakesh, S/o. C.Balaji, aged 27 years, permanently residing at No.5, Sadagopan Street, Radiation Nagar, Chromepet – 600 044. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**B.Dwarakesh**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, G.Nirmalprabhu, S/o. M.Gnanasekaran, aged 36 years, permanently residing at No.104, F1, Gajalakshmi Flat, 6th Cross Street, Sri Nagar, Kattupakkam, Chennai – 600056. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**G.Nirmalprabhu**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, S.Vigneshwaran, S/o. E.Saravanan, aged 25 years, permanently residing at No.1/577, 10th Street, Balaganesan Nagar, Padiyanallur, Ponneri Tk, Thiruvallur Dt – 600 052. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**S.Vigneshwaran**

********

After 10 days of the publication of this notice and within three months there after. I, P.Renukumar, S/o. Palani, aged 24 years, permanently residing at No.5/1300, Keezh Street, Veeralur Village and Post, Kalasapakkam Taluk, Thiruvannamalai District – 606 901. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**P.Renukumar**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர். தாம்பரம்.**

**ந.கா.1077/2021**

K.புருஷோத்தமன். ...மனுதாரர்

மனுதாரர் தன் மகள் P.யுவஸ்ரீ, எண்.7, துரைசாமி ரெட்டி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–600 045. என்கிற விலாசத்தில் 14.07.2019 என்ற தேதியில் பிறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறியதால் தற்போது மேற்படி பிறப்பினை பதிவு செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் தங்கள் ஆட்சேபணையை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

K.புருஷோத்தமன்,
மனுதாரர்.

**பொது அறிவிப்பு (படிவம் A)**

JKS [illegible]

[illegible]

**பொது அறிவிப்பு (படிவம் A)**

[illegible]

**தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்**

CIN: - L17111TZ1977PLC000776

பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்–636 302.

**31 மார்ச் 2021ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | | விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 31.12.2020 (தணிக்கையானது) | முடிந்த 3 மாதங்கள் 31.03.2021 (தணிக்கையானது) | முடிந்த 3 மாதங்கள் 31.03.2020 (தணிக்கையானது) | முடிந்த ஆண்டு 31.03.2021 (தணிக்கையானது) | முடிந்த ஆண்டு 31.03.2020 (தணிக்கையானது) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஏ) | செயல்பாடுகளிலிருந்து வருமானம் | 118.74 | 48.04 | 44.57 | 166.78 | 191.25 |
| | பி) | இதர வருமானம் | 1.18 | 80.23 | - | 81.41 | 1.30 |
| | | **மொத்த வருமானம்** | **119.92** | **128.27** | **44.57** | **248.19** | **192.55** |
| 2. | | செலவுகள் | | | | | |
| | ஏ) | கச்சா பொருட்கள் உபயோகம் | - | - | - | - | - |
| | பி) | வர்த்தக பொருட்கள் வாங்கியது | - | - | - | - | - |
| | சி) | முடிக்கப்பட்ட பொருட்களின் சரக்குகளில் மாற்றங்கள் , நடைபெற்று வரும் பணிகள் மற்றும் வர்த்தக இருப்பு | - | - | - | - | - |
| | டி) | ஊழியர் நல செலவுகள் | 30.23 | 12.77 | 10.93 | 43.00 | 58.05 |
| | இ) | நிதி செலவுகள் | 113.42 | 55.63 | 61.70 | 169.05 | 181.71 |
| | எப்) | தேய்மானம் மற்றும் அமார்டைசேஷன் செலவுகள் | 47.45 | 17.33 | 17.71 | 64.78 | 63.27 |
| | ஜி) | மற்ற செலவுகள் | 68.61 | 9.93 | 5.86 | 78.54 | 87.09 |
| | | **மொத்த செலவுகள்** | **259.71** | **95.66** | **96.20** | **355.37** | **390.12** |
| 3. | | நிதி கட்டணங்களுக்கு பின் ஆனால் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் சாதாரண செயல்பாடுகள் மூலம் லாபம்/(நஷ்டம்) (1–2) | (139.79) | 32.61 | (51.63) | (107.18) | (197.57) |
| 4. | | விலக்கு அயிட்டங்கள் | - | - | - | 6.96 | - |
| 5. | | சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் லாபம்(+)/ நஷ்டம் (3–4) | (139.79) | 32.61 | (51.63) | (114.14) | (197.57) |
| 6. | | வரி செலவுகள் | - | - | - | - | - |
| 7. | | சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு பின் நிகர லாபம்(+)/நஷ்டம் | (139.79) | 32.61 | (51.63) | (114.14) | (197.57) |
| 8. | | இதர விரிவான வருமானம் | | | | | |
| | i) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் | - | - | - | - | - |
| | ii) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் தொடர்பான வருமான வரி | - | - | - | - | - |
| | i) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் | - | - | - | - | - |
| | ii) | லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் தொடர்பான வருமான வரி | - | - | - | - | - |
| 9. | | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (7+8) | (139.79) | 32.61 | (51.63) | (114.14) | (197.57) |
| 10. | | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒன்று ரூ. 10/–) | 576.28 | 576.28 | 576.28 | 576.28 | 576.28 |
| 11. | | மறுமதிப்பீட்டு நீங்கலான இதர ஈக்விடி பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி | - | - | - | - | - |
| 12. | | ஒரு பங்கு சம்பாத்தியம் (முகமதிப்பு ஒன்றுக்கு ரூ. 10–) (வருடாந்திரமல்ல) அடிப்படை மற்றும் டைலூட்டட் | (2.43) | 0.57 | (0.90) | (1.98) | (3.43) |

குறிப்புகள்:

1. கம்பெனி குத்தகை வாடகை வருமானம் என்ற ஒரே பகுதியாக செயல்படுகிறது. எனவே தனி அறிக்கை தேவையில்லை.
2. 31.03.2021 அன்று முதலீட்டாளர் புகார் குறித்த நிலை:
காலாண்டு துவக்கத்தில் நிலுவை: இல்லை. காலாண்டில் பெறப்பட்டது: இல்லை,
காலாண்டில் தீர்க்கப்பட்டது : இல்லை, தீர்க்கப்படாமல் உள்ளது : இல்லை.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கு கடந்த காலாண்டு/ஆண்டு முடிவுகள் ரீகுரூப் செய்யப்பட்டுள்ளன.
4 மேற்கண்ட முடிவுகள் 12 மே 2021 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
5 கோவிட் – 19 தொற்று காரணமாக வருவாய் குறைவு போன்ற பல்வேறு இடர்பாடுகளையும் எங்களது கம்பெனி சந்தித்து வருகிறது.

**ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை** (ரூ. லட்சத்தில்)

| | | விவரங்கள் | 31.03.2021 | 31.03.2020 |
|---|---|---|---|---|
| | | ஆஸ்திகள் | | |
| (1) | | நடப்பு சாரா ஆஸ்திகள் | | |
| | ஏ. | சொத்து, நிலம் மற்றும் இயந்திரங்கள் | 1 172.19 | 1 126.56 |
| | பி. | நடைபெற்று வரும் மூலதன வேலை | - | 55.20 |
| | சி. | இதர இன்டேஜிபிள் ஆஸ்திகள் | 0.10 | 0.58 |
| | டி. | நிதி ஆஸ்திகள் | | |
| | | i) முதலீடுகள் | - | - |
| | | ii) கடன் மற்றும் முன் பணங்கள் | 9.80 | 9.35 |
| | | iii) இதர நடப்பு சாரா ஆஸ்திகள் | 10.96 | 10.96 |
| | இ. | ஒத்திவைக்கப்பட்ட வரி ஆஸ்திகள் (நிகரம்) | 7.62 | 58.10 |
| (2) | | நடப்பு ஆஸ்திகள் | | |
| | ஏ. | பொருள் விவரப் பட்டியல் | - | - |
| | பி. | நிதி ஆஸ்திகள் | | |
| | | i) பணம் மற்றும் பணத்திற்கு இணையானவை | 36.62 | 28.55 |
| | | ii) வர்த்தகம் பெறுதல்கள் | 246.61 | 252.69 |
| | | iii) மற்றவை | 49.79 | 35.54 |
| | சி. | நடப்பு வரி ஆஸ்திகள் (நிகரம்) | 30.28 | 34.70 |
| | டி. | இதர நடப்பு ஆஸ்திகள் | | |
| | | **மொத்த ஆஸ்திகள்** | **1 563.97** | **1 612.23** |
| | | ஈக்விடி மற்றும் பொறுப்புகள் | | |
| | | ஈக்விடி | | |
| | ஏ. | ஈக்விடி பங்கு மூலதனம் | 576.28 | 576.28 |
| | பி. | இதர ஈக்விடி | (1 010.26) | ( 845.64) |
| | | பொறுப்புகள் | | |
| 1. | | நடப்பு சாரா பொறுப்புகள் | | |
| | ஏ. | நிதி பொறுப்புகள் | | |
| | | i) கடன்கள் | 1 699.95 | 1 129.78 |
| | பி. | இதர நடப்பு சாரா பொறுப்புகள் | 138.65 | 398.70 |
| | சி. | ஒதுக்கீடுகள் | - | - |
| 2. | | நடப்பு பொறுப்புகள் | | |
| | ஏ. | நிதி பொறுப்புகள் | | |
| | | i) வர்த்தகம் செலுத்தல் | 10.56 | 7.41 |
| | | ii) இதர நிதி பொறுப்புகள் | 148.79 | 345.70 |
| | பி. | இதர நடப்பு பொறுப்புகள் | - | - |
| | சி. | ஒதுக்கீடுகள் | - | - |
| | | **மொத்தம் சமம் மற்றும் பொறுப்புகள்** | **1 563.97** | **1 612.23** |

இடம் : சேலம்
தேதி: 12.05.2021

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக
நிர்வாக இயக்குனர்